முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 238/2024

வாதி தரப்பு 1 வது சாட்சி சாமுவேல் ஆரோக்கியராஜ் என்பவரின் வாக்குமூலம் Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திருமதி.G.ரேவதி, கிரேடு -1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமுவேல் ஆரோக்கியராஜ் | வயது | : | 39 |
| தந்தை பெயர் | : | பால்ராஜ் | தாலுக்கா | : | திருச்சி |
| கிராமம் | : | திருச்சி | தொழில் | : | ரியல் எஸ்டேட் |

நாள் : 13-03-2025

வா.சா.1

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் முதல் விசாரணை பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விசயங்கள் உண்மையானது.

1) 7.3.1966 தேதியிட் கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1

2) 20.6.1977 தேதியிட்ட கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2

3) ஆசிர்பாதத்தின் இறப்பு சான்று புகைப்பட நகல் வா.சா.ஆ.3

4) யஆசிர்பாதத்தின் வாரிசு சான்று புகைப்பட நகல் வா.சா-ஆ.4

5) வட்டாட்சியர் வழங்கிய சான்று புகைப்பட நகல் வா.சா.ஆ.5

6) துரைராஜின் இறப்பு சான்று புகைப்பட நகல் வா.சா.ஆ-6

7) துரைராஜின் வாரிசு சான்றுபுகைப்பட நகல் வா.சா.ஆ.7

8) ராபர்ட் இறப்பு சான்று புகைப்பட நகல் வா.சா.ஆ.8

9) ராபர்ட் வாரிசு சான்று புகைப்பட நகல் வா.சா.ஆ.9

10) 26.11.2021 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-10

11) 15.12.2022 தேதயிட்ட தாவா 1வதுஅயிட்ட சொத்தை 1ம் வாதி கிரயம் பெற்றதற்கான கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11

12) 15.12.2022 தேதியிட்ட தாவா 2வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதி 4,5 வாதிகள் கிரயம் பெற்றதற்கான கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12

13) 15.12.2022 தேதியிட்ட தாவா 2வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதி 4,5 வாதிகள் கிரயம் பெற்றதற்கான கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13

14) 15.12.2022 தேதியிட்ட தாவா 3,4வது அயிட்ட சொத்துககளின் ஒரு பகுதி 6ம் வாதி கிரயம் பெற்றதற்கான கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14

15) 15.12.2022 தேதியிட்ட தாவா 5வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதி 7ம் வாதி கிரயம் பெற்றதற்கான கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.15

16) 4.1.2023 தேதியிட் தாவா சொத்துக்களை பொறுத்து 1 முதல் 6 வாதிகள் 7ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.16

17) சிட்டா கணினி நகல் வா.சா.ஆ.17

18) சொத்துக்களுக்கான வழிகாட்டு மதிப்பீடு கணினி நகல் வா.சா.ஆ.18

பிராது ப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) தாவா 1வது அயிட்ட சொத்தை 2 முதல் 5 பிரதிவாதிகள் அந்தோனிராஜ் மற்றும் இருவருக்கு அதிகார பத்திரம் வழங்கி அவர்கள் மூலமாக நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

2) 2வது அயிட்ட சொத்தின் தென்புறம் உள்ள 37 செண்டை 2 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் 4 நபர்களிடம் இருந்து நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

3) 2வது அயிட்ட சொத்தின் வடபுறம் உள்ள 37 செண்டை 2 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் 4 நபர்களிடம் இருந்து நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

4) 3வது 4வது அயிட்ட சொத்துக்களை 6ம் வாதி 2 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் 4 நபர்களிடம் இருந்து நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

5) தாவா 5வது அயிட்ட சொத்தை நான் கிரயம் வாங்கியுள்ளேன்.

6) 4,5 பிரதிவாதிகள் இளவர்கள் என்பதால் அவர்களுக்கு உரிய தொகையை நாங்கள் State Bank of India Air Force Station வங்கியில் வைப்பீடு செய்துள்ளோம்.

7) 1ம் வாதி வாங்கிய கிரயத்திற்காக 4,5 பிரதிவாதிகளுக்கு தலா ரூ-50 ஆயிரம் வங்கியில் வைப்பீடு செய்துள்ளோம். அதுபோல் 3 மற்றும் 4 வாதிகள், 4 மற்றும் 5ம் பிரதிவாதிகளுக்கு தலா ரூ-50 ஆயிரம் வங்கியில் வைப்பீடு செய்துள்ளோம் என்றால் சரிதான்.

8) 2,3 வாதிகள் வாங்கிய கிரயத்திற்கு 4,5 பிரதிவாதிகள் பெயரில் தலா ரூ-52,500/ வங்கியில் வைப்பீடு செய்துள்ளோம் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி வாங்கிய கிரயத்திற்கும் 4,5 பிரதிவாதிகள் பெயரில் தலா ரூ-10 ஆயிரம் வங்கியில் வைப்பீடு செய்துள்ளோம் என்றாசல் ரிதான்.

9)நான் வாங்கிய கிரயத்திற்கும் 4,5 பிரதிவாதிகள் பெயரில் தலா ரூ.85ஆயிரம் வைப்பீடு செய்துள்ளேன்.

10) மேற்படி கிரயங்கள் பூர்விக சொத்தை பொறுத்து கிரயம் வாங்கியதால் 4,5 பிரதிவாதிகள் பெயரில் வங்கியில் வைப்பீடு செய்துள்ளேன்.

11) மேற்படி வைப்பீடு செய்துள்ள வங்கி டெபாசிட் நகலை மேற்படி கிரய பத்திரத்தோடு இணைத்துள்ளேன்.

மறுவிசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-கா.பூர்ண ஜெய ஆனந்த்

முதன்மை மாவட்ட நீதிபதி

தஞ்சாவூர்